

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.1.2024) சென்னை, மாநகர போக்குவரத்து கழகத்தின் மத்திய பணிமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 634.99 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக 1666 பேருந்துகளை கொள்முதல் செய்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதன் முதற்கட்டமாக 100 BS–VI பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்கள், தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொருளாளர் கி. நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

போக்குவரத்துக் கழகங்கள் சார்பில் ரூ.635 கோடி மதிப்பில் புதிதாக 1666 பேருந்துகள் கொள்முதல்!

# முதற்கட்டமாக 100 புதிய பி.எஸ்.வி.ஐ.பேருந்துகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து தொடங்கி வைத்தார்!

**சென்னை, ஜன.21-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.1.2024) சென்னை, மாநகர போக்குவரத்துக் கழகத்தின் மத்திய பணிமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் சார்பில் 634.99 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக 1666 பேருந்துகளை கொள்முதல் செய்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, இதன் முதற்கட்டமாக 100 BSVI பேருந்துகளை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொடியசைத்து தொடங்கி வைத்தார்.**

தமிழ்நாட்டில் உள்ள ஏழை எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கு இன்றியமையாத போக்குவரத்துச் சேவைகளை தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் வாயிலாக குறைந்த கட்டணத்தில் அரசு வழங்கி வருவதோடு, அனைத்து கிராமப் பகுதிகளுக்கும் பேருந்து பயண வசதியை ஏற்படுத்தி மாநிலம் முழுவதும் தடையற்ற போக்குவரத்து சேவையை அளித்து வருகிறது. அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவ-மாணவியர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு இலவச பேருந்து பயணச் சலுகை, சாதாரண நகர கட்டண பேருந்துகளில் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொள்வதற்காக "விடியல் பயணம்" திட்டம், பொதுமக்களின் தேவைக்கேற்ப புதிய பேருந்து வழித்தடங்களை தொடங்கி வைத்தல், பழைய பேருந்துகளை புதுப்பித்தல், புதிய பேருந்துகளை கொள்முதல் செய்தல், பேருந்து பணிமனைகளை மேம்படுத்துதல் போன்ற பல்வேறு திட்டங்களை தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் 19.10.2022 அன்று சட்டப்பேரவையில் 110விதியின் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், பொதுமக்களின் பேருந்து பயன்பாடு அதிகமான நிலையில், போக்குவரத்துக் கழகங்களை மேம்படுத்திட பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருவதாகவும், 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும் என்றும், அடிச்சட்டம் (Chassis) நல்ல நிலையில் உள்ள 1000 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும் அறிவித்தார். மேலும், 2023-24ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கையில், 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 1,000 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்யப்படும் என்றும், அடிச்சட்டம் (Chassis) நல்ல நிலையில் உள்ள 500 பழைய பேருந்துகள் புதுப்பிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது. அதுமட்டுமின்றி நீலகிரி மாவட்டத்திற்கென மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 16 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

அந்த அறிவிப்புகளின்படி, பொதுமக்களின் போக்குவரத்து தேவைகளை பூர்த்தி செய்கின்ற வகையிலும், அரசுப் போக்குவரத்து கழகங்களில் புதிய பேருந்துகளை இயக்கிடும் வகையிலும். 634.99 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக 1666 BSVI பேருந்துகளை கொள்முதல் செய்து இயக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அதன் முதற்கட்டமாக. விழுப்புரம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 40 புதிய பேருந்துகளும், கோயம்புத்தூர் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 40 புதிய பேருந்துகளும். கும்பகோணம் அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 10 புதிய பேருந்துகளும், திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 5 புதிய பேருந்துகளும், மதுரை அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு 5 புதிய பேருந்துகளும், என மொத்தம் 100 புதிய BSVI பேருந்துகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் அவர்கள் நேற்று கொடியசைத்து தொடங்கி வைத்தார். எஞ்சியுள்ள பேருந்துகள் அடுத்த இரண்டு மாதங்களில் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட உள்ளது.

இந்த நிகழ்ச்சியில், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, மாநகர் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், போக்குவரத்துக் கழகங்களின் மேலாண்மை இயக்குநர்கள், தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் பொருளாளர் கி. நடராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில்

# கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வெ.கணேசன் வேண்டுகோள்!



*கடலூர், ஜன. 21- கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர், திறன் மேம்பாட்டுதுறை தொழிலாளர் நலன் அமைச்சர் சி.வெ.கணேசன் விடுத்துள்ள அழைப்பு வருமாறு:-*

*திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞரணி மாநில செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன் பாளையத்தில் இன்று (ஜனவரி 21ஆம் தேதி ) நடைபெறவுள்ள, கழக இளைஞரணி மாநாட்டில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றவுள்ளார்.*

*அதுசமயம் நாடாளுமன்ற , சட்டமன்ற, உறுப்பினர்கள், செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை , வார்டு, பகுதி, கழக செயலாளர்கள், மாவட்ட அனைத்து சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், மற்றும் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் இம்மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மு.ப. அழகியநம்பி
### சனவரி 21 (2022)



**கழகம் துவக்க காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு, சட்டக் கல்லூரியில் மாணவராக பயிலும் போதே 'மாணவர் தி.மு.க.'வில் உறுப்பினராகி பணியாற்ற தொடங்கியவர்.**

**1971ஆம் ஆண்டு, தூத்துக்குடி உள்ளடக்கிய ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் வளர்த்தவர்.**

**நெல்லை மாவட்ட கூட்டுறவு வங்கி தலைவராகவும் – மாநில தமிழ்ச் சங்க தலைவராகவும் பதவி வகித்தவர்.**

**நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு பதினான்கு மாதங்கள் சிறைவாசம் அனுபவித்தவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# உதயநிதியின் இதயநிதிகளே! சேலத்தில் திரளுங்கள்!!



**த**மிழ்நாடு மட்டுமல்ல உலக நாடுகளில் மிகப் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தி வரலாற்றை மாற்றி எழுதியவர்கள் இளைஞர்களும் மாணவர்களும் தான். சர்வ வல்லமை படைத்தவர்கள் தான் தானென்று சண்டியர்த்தனம் செய்து சர்வாதிகார ஆட்சி நடத்தி மக்களை மாக்களாகக் கருதி கொடுமைத்தனம் மூலமாக கொத்தடிமைகளாக நடத்தி மறுத்தால் கொன்றொழித்த கோரகுணம் கொண்டவர்கள் ஆண்டதெல்லாம் கருப்பு பக்கங்களாக படிப்பவர்கள் கண்ணீர் வடிக்கும் பக்கங்களாக நிறைந்திருப்பது ஏராளம்! ஏராளம்!

அப்போதெல்லாம் வெகுண்டெழுந்து வீரமுழக்கமிட்டு தம் மக்களை காத்திட "பொறுத்தது போதும் பொங்கி எழு(( என்ற அடிப்படையில் களம்புகுந்து இன்னுயிரைத் தந்து மண்ணுயிரை மக்கள் உயிரை காத்திட அதிகாரத் திமிர்பிடித்த ஆட்சியாளர்களின் சிரம் அறுத்து நம் தாய் மண்ணை செம்மண் பூமியாகிட இரத்தம் சிந்தியவர்கள் இளைஞர்கள் தான். உயிரற்ற மக்கள் இருக்கமுடியாது அந்த தேசத்தின் மண்ணுக்கும் உயிர் இருக்காது. செத்ததேசமாக இல்லாமல் தாம் செத்தொழிந்தாலும் பரவாயில்லை என தியாகத்தால் சிகப்புத் தேசமாக்கி மக்களை காத்த கூட்டம் தான் இளைஞர் கூட்டம்.

முதன் முதல் தி.மு.க. இளைஞரணி செயலாளராக நியமிக்கப்பட்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மெச்சிப் பாராட்டும் வண்ணம் கழகத்தை வளர்க்க கண்இமைமூடாமல் உழைத்தவர்தான் தற்போதைய தலைவர் அண்ணன் தளபதி அவர்கள்.

லட்சக்கணக்கான இளைஞர்களை கழகத்தில் இணையச் செய்திட இரவு பகலெல்லாம் பயணித்து இலட்சிய உணர்வை ஊட்டி திராவிட இயக்க கொள்கையின் பால் கவரச் செய்து குருட்டு ஆட்சியாளரின் இருட்டில் சிக்கி சீரழிவிற்கு ஆட்பட்டு கிடந்த மக்களையும் தமிழ்நாட்டையும் மீட்டெடுக்க கடுமையாக உழைத்தவர் தான் கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள்.

அதனால் தான் இரண்டு புயல்கள் கழகத்தைச் தாக்கிய போதும் புயல்களை கிளப்பியவர்கள் பூரித்து மகிழ்ந்து பொங்கிச் சிரித்து "இடிந்தது கழகக் கோட்டை முடிந்தது கலைஞர் அரசியல்(( என்று புளகாங்கிதம் அடைந்த போது "கழகம் மண்கோட்டையல்ல இடிக்க முடியாத எஃகு கோட்டை" என்று தமது இளைஞர் படையால் கழகத்தைக் காத்தவர் அண்ணன் தளபதி அவர்கள்.

அவர் வழி வந்தவர் களம் கண்ட முதல் தேர்தலிலேயே மாபெரும் வெற்றியைப் பெற்று மாண்புமிகுவான சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இளைஞர் அணி செயலாளராக நியமிக்கப்பட்டப்பின் கழகத்திற்கு எழுச்சி ஏற்பட்டதோடு உணர்ச்சி மிகு பட்டாளம் ஓராண்டுக்குள் இருபதைந்து லட்சம் பேர் கழகத்தில் இணைந்தனர். அதோடு மட்டுமா அதற்குப் பின்னரும் லட்சக்கணக்கானோர் இளைஞர் அணியில் இணைந்த வண்ணமே உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் இருந்த போது சென்னையில் பிரமாண்டமான ஊர்வலம் நடத்தினார். மிடுக்கு நடையும், எடுப்பு உடையும், மிரட்டும் கைவீச்சும், கூர்மையான பார்வையும் தளபதி அவர்கள் தலைமையும் ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் பங்கேற்பும், கடைப்பிடித்த கட்டுப்பாடும் அப்பப்பா... மேடையில் நின்று பார்வையிட்ட தலைவர் கலைஞர் மற்றும் சிறப்பு விருந்தினர் தமிழ் மண்ணில் சிலையாக சிரித்துக் கொண்டே நிற்கிறாரே முன்னாள் பிரதமர் வி.பி.சிங் போன்றோர் வியந்து போயினர். வீரமிக்க இளைஞர் அணி எழுச்சிப் பேரணியை கண்டு இதயமுற போற்றினர், வாழ்த்தினர்.

அதேபோல் இளைஞரணி முதல் மாநாட்டை தளபதி அவர்கள் செயலாளராக இருந்து 2007ல் நெல்லையில் நடத்திக் காட்டி தி.மு.க வரலாற்றில் லட்சக்கணக்கானோர் கலந்து கொண்ட மாநாடு என்ற சிறப்பைச் சேர்த்தார். எவருக்கும் சாத்தியமில்லாததை சாதித்துக் காட்டினார்.



**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

அதேபோல் தான் கழக இளைஞரணி செயலாளர் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் வரும் 21ஆம் தேதி சேலத்தில் இரண்டாம் மாநாடு நடத்தப் போகிறார். ஒரு வார்த்தை சொன்னால் போதும் திரண்டெழும் இளைஞர்கள் இருக்க உத்தரவு போட்டால் எழுதவா வேண்டும்! சிலிர்த்தெழும் சிங்கங்களாய், சீறிடும் புலிகளாய், பாய்ந்தோடும் பந்தயக் குதிரைகளாய், படைக் களம் புகுந்த புறநானூறு போர் படை வீரர்களாய் புறப்படத் தயாராகி வருகின்றனர்.

எத்தனையோ மாநாடுகளை தி.மு.க. நடத்தியிருக்கிறது. அவையனைத்தையும் விஞ்சிடப் போகிறது இந்த இளைஞரணி மாநாடு. தலைமையேற்று நடத்துபவர் தரணி போற்ற நாடாள்பவரின் புதல்வராயிற்றே! சிந்திப்பதை நிறுத்துகிற வரை கழகத்தை கண்ணாய் கருதிய கலைஞர் அவர்களின் பேரனாயிற்றே! மரபணு தன் வேலையை காட்டத்தான் செய்யும்!

தந்தை பெரியார் வாலிபராய் இருந்து திராவிட இயக்கத்தை கட்டி எழுப்பிய போது ஆட்சியில் அமருவோம், அமைச்சராவோம், முதல்வராவோம் என்றெல்லாம் எண்ணாது, எதிர்பார்ப்பே இல்லாது அவர் பின்னால் சென்ற இளைஞர் தான் அறிஞர் அண்ணா. அந்த அண்ணா அவர்களின் பின் அணிவகுத்த இளைஞர் பட்டாளத்தில் இருந்த எரிமலைக் குளம்பை தனது பேச்சிலும் எழுத்திலும் தந்து முத்திரைப் பதித்த இளைஞர் தான் கலைஞர் அவர்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் பின்னால் திக்கெட்டிலிருந்தும் திரண்டெழுந்து வந்தவர்கள் இளைஞர்கள் தான். அப்போது வந்த இந்தி திணிப்பை எதிர்கொண்டு "எம்பக்கம் புகுந்து வரும் இந்தி எத்தனைப் பட்டாளம் கூட்டிவரும்" என்று போர் முரசு எழுப்பி அன்றைய பிரதமர் நேருவை மிரளச் செய்தது அறிஞர் அண்ணா அவர்களின் இளைஞர் படை. அதன் முன்னணி தளபதியாக திகழ்ந்தவர் ஓடிவரும் ரயிலுக்கு முன்னே பாய்ந்து உருண்டு வரும் சக்கரத்தின் தண்டவாளத்தில் தலை வைத்துப் படுத்துத் தன்னுயிரை தமிழ் காக்க தரத் துணிந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அன்றைய எழுச்சிமிகு இளைஞர்.

மொழியை காத்திட உலக வரலாற்றில் அன்றைய ஆட்சியாளரின் துப்பாக்கிக் குண்டை நெற்றியில் வாங்கியதும், தீக்குளித்து மாண்டதும், நஞ்சுண்டு மாய்ந்ததும் யார்? யார்? கழக இளைஞர்கள் தான். இப்படிப்பட்ட வரலாறு வேறு எந்த மொழிக்கும் இல்லை, வேறெந்த கட்சிக்கும் இல்லை, எந்நாட்டிலும் நடந்ததில்லை. அந்த வீரமும் தியாகமும் தான் அறிஞர் அண்ணா அவர்களை திராவிட நாடு கேட்க வைத்தது. அத்தகைய இளைஞர்களின் போர்க்குணம் தான் தந்தை பெரியார் அவர்களை தனித் தமிழ்நாடு கேட்கச் செய்தது. அந்த இளைஞர்களின் உணர்வுதான் கலைஞர் அவர்களை மாநில சுயாட்சி வேண்டுமென வலியுறுத்த வைத்தது.

சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பின்னால் திரண்டிருக்கும் இளைஞர் பட்டாளம் தான் ஒன்றிய அரசின் உச்சந்தலையை உலுக்கியெடுத்து தமிழின உரிமைகளை மீட்டெடுக்க போராடுவதோடு முதல்வர் அவர்களை மதவாத ஆட்சியை விரட்டியடிக்க இந்தியா கூட்டணி என்ற வலிமையான கூட்டணியை உருவாக்க வைத்தது. பாவம் கோழைகள் தற்போது இந்தியா என்ற வார்த்தையை உச்சரிக்கவே அஞ்சுகிறார்கள்.

நாம் என்ன ஆயுதம் எடுக்க வேண்டும் என்று முடிவெடுக்க வைப்பது நமது எதிரிகள் தான் என்பார்கள். அது உண்மைதான்! கல்வியை காவிமயமாக்க முயற்சிக்கும் கூட்டத்தில் முதுகெலும்பை முறிக்க வேண்டியது நமது கடமை, எதிர்கால தமிழ் சமுதாயத்தைக் காக்க வேண்டிய பொறுப்பு இன்றைய இளைஞர்களின் பொறுப்பு. இழந்த மாநில உரிமைகளை மீட்காமல் விட்டு விட்டால் இனம் அழியும், மொழி அழியும். அதைத் தடுக்காமல் இருக்க நாம் என்ன கோழைகளா? அந்நியனை இந்தியாவிலிருந்து விரட்ட போரிட்ட காந்தி இளைஞராக இருந்த போது தான் போர் நடத்தினார். அந்த சுதந்திரப் போரில் பங்கெடுத்து கொண்டவர்களில் தமிழ் இளைஞர்களின் பங்கும் தியாகமும் அதிகம்.

என்னைக் கொல்வதென்று முடிவெடுத்து விட்டீர்கள் கோழைகளே என்னை தூக்கில் போடாதீர்கள் துப்பாக்கியால் சுடுங்கள் என்று மார் நிமிர்த்தி பிரிட்டிஷ் அரசை கேட்ட பகத்சிங் யார்? ஏகாதிபத்தியத்தை எதிர்த்த இளம் சிங்கம். விடிந்தால் தூக்கு என்ற போதும் லெனினின் "புரட்சியும் அரசியலும்" புத்தகத்தை படித்துக் கொண்டிருந்த இளம் புரட்சியாளன்.

அர்ஜென்டினாவில் பிறந்து மருத்துவம் படித்து ஏகாதிபத்திய அமெரிக்க வல்லரசின் ஆதிக்க கொடுமையிலிருந்து லத்தீன் அமெரிக்க நாட்டு மக்களை காக்க சபதமேற்று துப்பாக்கியை கரம் எடுத்து கியூபா நாட்டு விடுதலைக்காகப் சர்வாதிகாரி பாடிஸ்டா அரசை விரட்டியடித்து தன் நண்பர் பிடல் காஸ்ட்ரோ கரத்தில் கியூபாவை ஒப்படைத்து விட்டு அமைச்சர் பதவியை துறந்தெறிந்து பொலிவியா நாடு சென்று அந்நாட்டை சர்வாதிகாரத்திலிருந்து மீட்டெடுக்க போர்க்களம் புகுந்து இராணுவத்தினரிடம் ஒரு கயவனால் காட்டிக் கொடுக்கப்பட்டு மாறுகால் மாறுகை வெட்டப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்ட புரட்சியாளர் சேகுவாரா யார்? ஒரு இளைஞர் தான்.

அறுபது பேர்களை மட்டுமே வைத்து கிராண்மா என்ற பத்து பேர் பயணம் செய்யும் கப்பலை வாங்கி அறுபது பேரையும் அதில் அழைத்து சென்று கியூபாவில் போர் நடத்தி முதல் போரில் தோற்ற பின்னும் சிறையிலடைத்தபின்னும் மீண்டும் வெளிவந்து அமெரிக்க வல்லரசால் அறுநூறுக்கும் மேற்பட்ட முறை கொல்ல முயற்சித்தும் அதை முறியடித்து வெல்ல முடியாத வீரனாக வாழ்ந்து கியூபாவில் நல்லரசை தந்த பிடல் காஸ்ட்ரோ போர்களத்தில் துப்பாக்கியோடு புகுந்த போது வயது 19, அந்த இளைஞர் படை சாதித்தது அதிகம்.

கல்லூரியில் படிக்கும் போதே துப்பாக்கி வைத்திருந்து பழமைவாதத்தை எதிர்த்து மதம் ஒரு அபின், கடவுள் ஒரு கற்பனை வடிவம் என்று உழைப்பாளர் உங்களிடம் இழப்பதற்கென்று எதுவும் இல்லை அறுப்பதற்கென்று இருக்கிறது அடிமைச் சங்கிலி என்று தொழிலாளர் வர்க்கத்திற்காக வருடக்கணக்கில் படித்து மூலதனம் என்ற கருத்துப் பெட்டகத்தை வரைந்ததோடு உலகப் புகழ்பெற்ற மாற்றத்தை பல நாடுகளில் மலரச்செய்த கம்யூனிஸ்ட் அறிக்கையை தந்த கார்ல் மார்க்ஸ் அவருக்கு உறுதுணையாக இருந்த ஏங்கெல்ஸ் இருவரும் பெரிய புரட்சி ஏற்படுத்த துவங்கிய போது இளைஞர்கள் தான்.

அந்த இருவரின் சிந்தனையையும் உள்வாங்கி தன் அண்ணன் அலெக்ஸாண்டர் ஜார் மன்னனின் ஆட்சியால் கொல்லப்பட்டதைக் கண்டு மாணவனாக இருந்த போதே மார்க்ஸியத்தை படித்து சோவியத் ஒன்றியத்தை உருவாக்கி காட்டிய லெனின் இளைஞராக இருந்த போது தான் புரட்சிக்கு விதையூன்றி இறுதியில் வெற்றி கண்டார். ஜோசப் ஸ்டாலின் இரண்டாம் உலக யுத்தத்தில் இட்லர், முசோலினி படையை வீழ்த்திட காரணம், அவர் இளைஞராக இருந்த போது கம்யூனிஸ்ட் கருத்துகளை கற்று போர்க்களம் புகுந்து வென்றார்.

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இளைஞராக இருந்த போதுதான் ஐ.என்.ஏ என்கிற இந்திய தேசிய இராணுவத்தை அந்நிய நாட்டிலிருந்து உருவாக்கி சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு "நீங்கள் இரத்தத்தை தாருங்கள் நான் சுதந்திரத்தைப் பெற்று தருகிறேன்" என்று அழைப்பு விடுத்த போது அவருடைய படையில் அதிகம் சேர்ந்தவர்கள் யார் தமிழ் இளைஞர்கள் தான்.

1688 ஆம் ஆண்டு நிகழ்ந்த ஆங்கிலேயப் புரட்சிக்கும் 1775 ஆம் ஆண்டு நடந்தேறிய அமெரிக்க விடுதலைக் புரட்சிக்கும் 1789 ஆம் ஆண்டு நிகழ்ந்த பிரெஞ்ச் புரட்சிக்கும் காரணமாக இருந்தவர்கள் யார்? எல்லாம் அந்தந்த நாட்டு இளைஞர்கள் தான்.

வால்டேர், ரூசோ என்ற இருபெரும் புரட்சிகர எழுத்தாளர்கள் மன்னர்கள் ஆட்சியின் மகுடத்தைத் தகர்த்தெறிந்து மக்களாட்சியை மலரச் செய்த பிரெஞ்சு புரட்சிக்கு காரணமாக இருந்தவர்கள். அந்த இருவரும் இளைஞர்களாக இருநத போது எழுதிய எழுத்து தான் பிரெஞ்ச் புரட்சிக்கு வித்திட்டது.

மக்கள் ஆதரவும், தெளிவான பார்வையும், தொலை நோக்கு சிந்தனையும், தொய்வில்லா உழைப்பும், சோம்பலற்ற பணியும், அணுகுமுறையில் பாசமும், அரவணைப்பில் அன்பும், வெற்றிக்கு மாபெரும் உறுதியும் ஒரு தலைமைக்கு அவசியமாகும். இந்த அனைத்தும் ஒருங்கேபெற்று திகழ்பவர் தான் சகோதரர் உதயநிதி ஸ்டாலின். அதனால் அப்பழுக்கற்ற அவரது உண்மையான உழைப்பு எப்படி இந்தளவிற்கு அவரை உயரச் செய்ததோ அதேபோல் அவரது எண்ணப்படி இல்லை! இல்லை! அதைவிட அதிகமாகவே தமிழ்நாட்டு வரலாற்றில் இப்படி ஒரு மாநாடு இது வரை நடந்ததில்லை என்று கூறுமளவிற்கு இந்த மாநாடு அமைந்திட எதிரிகள் மிரண்டு அதிர்ந்திட தமிழகத்தை தொடர்ந்து வஞ்சிக்கும் ஒன்றிய பா.ஜ.க அரசுக்கு "வரப்போகிறது ஆபத்து" என்று அரண்டிடும் வண்ணம் இளைஞர்களே கூடுவோம் சேலத்தில்! வெல்வோம் நாற்பதும்! உதயநிதியின் இதயநிதிகளே! சேலத்தில் திரளுங்கள்!

அறிஞர் அண்ணா தம்பிகளே! அனல்கக்கும் விழியினரே!
கலைஞர் காத்த கழகத்தினை! காத்திடவே புறப்படுங்கள்!
தளபதி ஆட்சி சாதனைகளை தரணியெங்கும் கூறிடுங்கள்!
உதயநிதியின் இதயநிதிகளே! உணர்ச்சிப்பிளம்பாய் கிளர்ந்தெழுங்கள்!
சேலத்துதேசம் திணறிடவே! திசைஎட்டிலிருந்தும் திரண்டிடுங்கள்!
வெல்லட்டும் உமதுபடை! உமை வெல்லுதற்கோ ஏது படை!